தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தென் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு

தென் தமிழகத்தில் ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ வெள்ளிக்கிழமை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தென் தமிழகத்தின் சில இடங்களில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த மழை வெள்ளிக்கிழமையும் தொடரும். லட்சத்தீவுகள் அருகில் காற்று மேல் அடுக்கு சுழற்சி உருவாகியுள்ளது. இதனால் தமிழகத்துக்கு மழை கிடைக்க வாய்ப்பில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் பெய்த மழை (மில்லி மீட்டரில்): பாபநாசம் - 180, கொடைக்கானல், கமுதி, பாளையங்கோட்டை, சிவகிரி தலா 10 மி.மீ.

## கொடைக்கானலில் சாரல் மழை

கொடைக்கானலில் மேக மூட்டத்துடன் லேசான சாரல் மழை பெய்ததால் பனியின் தாக்கம் குறைந்து காணப்படுகிறது. கொடைக்கானலில் கடந்த 2 மாதங்களாக பனிப் பொழிவு நிலவி வந்தது. இதனால் கடுமையான குளிர் நிலவியது. இந் நிலையில் புதன்கிழமை அதிகாலை முதலே அதிக அளவில் மேகமூட்டம் நிலவியதுடன் தொடர்ந்து சாரல் மழை பெய்து வந்தது. இதனால் மலைச் சாலைகளில் வரும் வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டு மெதுவாக ஊர்ந்து சென்றன. பனியின் தாக்கம் குறைந்ததால் ஓரளவுக்கு பனியின் தாக்குதலில் பொது மக்கள் சற்று மீண்டுள்ளனர். ஆனாலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை சற்று குறைந்தே காணப்படுகிறது. லேசான சாரல் மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தாங்கள் சாகுபடி செய்திருந்த பயிர்களில் களையெடுத்தல், மண்கட்டுதல், உழவுஇடுதல் போன்ற விவசாயப் பணிகளை

மேற்கொண்டனர். தொடர்ந்து நிலவும் சாரல் மழையால் குளிரும் நிலவி வருகிறது.

கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

பழனி, ஜன. 8: பழனி அருகே நெய்க்காரப்பட்டி ஸ்ரீரேணுகாதேவி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

பழனி அருகே நெய்க்காரப்பட்டி ஸ்ரீரேணுகாதேவி மேல்நிலைப் பள்ளியில் 10-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்காக சந்திப்போம், சாதிப்போம் என்ற தலைப்பில் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஸ்ரீரேணுகாதேவி கல்விக் குழுமங்களின் தலைவர் ரஞ்சிதம் ராமச்சந்திரன் தலைமை வகித்தார். பள்ளி ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் பாபு என்ற ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். தலைமையாசிரியை விஜயா வரவேற்புரை ஆற்றினார். அரசுப் பொதுத் தேர்வை மாணவர்கள் எளிதாக எதிர்கொள்வது தொடர்பாக பல்வேறு பள்ளிகளை சேர்ந்த ஆசிரியர்கள் ஈஸ்வரன், ராமர், சுப்பிரமணியன், சீனிவாசன், சகுந்தலா, கோபிநாத், பவானி ஆகியோர் விளக்கமளித்தனர். விழாவின் போது கடந்த கல்வியாண்டில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி செயலர் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு தேர்வுக் கையேடுகளை அப்போலோ கணினி நிறுவனமும், உடுமலை வித்யாசாகர் கலைக் கல்லூரியும் வழங்கின. நிகழ்ச்சிகளை ஜெகதீஸ்வரன் தொகுத்து வழங்க, இறுதியில் கதிர்வேல் நன்றி கூறினார்.

## தேனி மாவட்டத்தில் மழையளவு குறைவு

தேனி மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளைவிட தற்போது மழையளவு குறைந்து வருவதால், அணைகளின் நீர்மட்டமும் குறைந்து வருகிறது. கோடை காலத்தில் குடிநீர் மற்றும் பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டு உள்ளது.

கேரளம் மற்றும் தேனி மாவட்டங்களில் பெய்யும் மழையின் மூலம் முல்லை பெரியாறு, வைகை அணையின் நீர்மட்டம் உயரும். இந்த அணைகளின் மூலம் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த 1.70 லட்சத்துக்கு அதிகமான விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

அதோடு மட்டுமல்லாமல், இம் மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான மக்களின் தாகத்தையும் தீர்த்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக படிப்படியாக மழை அளவு குறைந்து வருகிறது. இதனால் விவசாய நிலங்களின் பரப்பளவு குறைந்து, பிளாட்டுகள் போடும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், பருவ காலங்களில் மழை பெய்தால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கடந்த 2 மாதங்களில் கடந்த ஆண்டை விட 30 சதவீதம் பருவமழை குறைந்துள்ளது. பல்வேறு மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. குறிப்பாக, கோவை மற்றும் தேனி மாவட்டங்களில் அதிக அளவு நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. தேனி மாவட்டத்தில் ஏழு வருடங்களுக்கு முன் 1298 மி.மீ. மழை பெய்துள்ளது. ஆனால், படிப்படியாக குறைந்து கடந்த 2013ஆம் ஆண்டு 843 மி.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. மேலும் புள்ளிவிவரங்களின் படி தமிழகத்தில் அதிகளவு நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வரும் மாவட்டத்தில் முதலிடத்தில் தேனி மாவட்டம் உள்ளது. இங்கு 14.39 மீட்டர் ஆழத்தில் உள்ளது. இதே நிலை நீடித்தால், தேனி மாவட்டத்தில் தண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது. வருசநாடு மலைப்பகுதியில் பெய்யும் மழை நீரே வைகை அணையின் முக்கிய நீ0ர் ஆதாரம். ஆனால் இப் பகுதிகளில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால், மூலவைகை ஆற்றில் நீர் வரத்து கிடையாது. இதனால் வைகை அணை அதன் முழு கொள்ளளவான 71 அடியை கடந்த 2 ஆண்டுகளாக எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது முல்லை பெரியாறு அணையில் இருந்துவரும் தண்ணீரை வைத்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், முல்லை பெரியாறு அணையில் நீர் பகுதியில் கடந்த 20 நாள்களுக்கு மேலாக மழை கிடையாது. இதனால் இப் பகுதியில் நீர் வரத்து குறைந்துவிட்டது. இப் பகுதியில் இருந்து வெளியேறும் தண்ணீர் 2 முதல் 40 கன அடி நீர் மட்டுமே வைகை அணையை வந்து அடைகிறது. இந்நிலையில் தற்போது வைகை அணை மற்றும் முல்லை பெரியாறு அணைகளின் நீர்மட்டம் கடந்த 8 ஆண்டுகளை விடவும், குறிப்பாக கடந்த 2 ஆண்டுகளை விட அதிகளவில் தண்ணீர் மட்டம்

குறைந்து வருகிறது. இதனால் தற்போது குளிர் காலத்திலேயே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இதே நிலை நீடித்தால் கோடை காலத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் உள்ளது. மேலும் வைகை அணை நீர்ப் பிடிப்பு பகுதியில் வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட மண் மற்றும் மணல் 20 அடி வரை தேங்கியுள்ளது. இதனால் நீர் தேக்கும் அளவு குறைந்து வருகிறது. மேலும் வைகை அணை நீர் தேக்கம் மற்றும் ஆற்றுப் பகுதியில் மோட்டார் வைத்து தண்ணீரை உறிஞ்சி வருகின்றனர். இதனாலும் தண்ணீரின் அளவு குறைந்து வருகிறது. வைகை அணையை தூர் வாரி தண்ணீரை தேக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், அணையின் நீர்த்தேக்கப் பகுதிகளில் மோட்டார் மூலம் உறிஞ்சப்படும் தண்ணீரைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் அணைகளின் நீர்மட்டம்:

வைகை அணை:2012, ஜன.8 ஆம் தேதி நீர் மட்டம்: 67.04 அடி, நீர் வரத்து: 1022 கன அடி, நீர் வெளியேற்றம்: 360 கன அடி

2014, ஜன. 8ம் தேதி:நீர் மட்டம்: 40.78 அடி, நீர் வரத்து: இல்லை, நீர் வெளியேற்றம்: 60 கன அடி

முல்லை பெரியாறு:2012, ஜன.8ஆம் தேதி

நீர் மட்டம்: 122.80 அடி, நீர் வரத்து: 401 கன அடி, நீர் வெளியேற்றம்: 1355 கன அடி

2014,ஜன,8ஆம் தேதி:நீர் மட்டம்: 114.10 அடி, நீர் வரத்து: 151 கன அடி, நீர் வெளியேற்றம்: 344 கன அடி.

இது குறித்து வைகை அணை பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியது: அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யாததால் நீர் வரத்து குறைந்துள்ளது. இனிவரும் காலங்களில் மழை பெய்தால் மட்டுமே கோடை காலங்களில் குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்கலாம். இல்லையேல் குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை வரலாம் என்றனர்.

## கம்பத்தில் கால்நடை வளர்ப்போர் சாலை மறியல்

காவல் துறையினர் கறவை மாடுகளை ஆய்வு செய்வதை கண்டித்து, வியாழக்கிழமை குமுளி- தேனி தேசிய நெடுஞ்சாலையில் கால்நடை வளர்ப்போர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

கம்பம் பகுதியில் நூற்றுக்கணக்கானோர் அடிமாடுகளை ஆந்திராவிலும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாங்கி, கேரளாவில் மொத்த விற்பனை செய்து வந்தனர். கடந்த மாதம் கோமாரி நோய் காரணமாக கேரளாவில் அடிமாடுகள் தடை செய்யப்பட்டன. இதனால் அடிமாடுகள் கம்பத்தில் தேங்கின. இவற்றை முறையாக பராமரிக்கவில்லை என்று பிராணிகள் வதை தடுப்புப் பிரிவினர் வடக்கு காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தனர். காவல் துறையினரும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர். வியாழக்கிழமை கம்பம் வடக்குப்பட்டி, மலைப்பகுதிகள் மற்றும் வீடுகளில் சென்று மாடுகளை காவல் துறையினர் தலைமையில் பிராணிகள் வதை தடுப்புப் பிரிவினர் ஆய்வு செய்ய வந்தனர். இதனால் கால்நடை வளர்ப்போர் மற்றும் கறவை மாடுகள் வளர்ப்போரும் ஆத்திரம் அடைந்தனர். ஆய்வு ஈடுபட்டவர்களையும், காவல் துறையினரையும் அனுமதிக்க மறுத்ததோடு திடீரென்று குமுளி- தேனி தேசிய நெடுஞ்சாலையில் நூற்றுக்கணக்கானோர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

மறியலில் ஈடுபட்டவர்களிடம் காவல் துறையினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தப் பிரச்னை நீதிமன்றங்களில் இருப்பதால், விரைவில் தீர்க்கப்படும் என்று சமாதானம் செய்து போலீஸார் அனுப்பினர். இந்த மறியலால் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் கையிருப்பு: இணைப்பதிவாளர் தகவல்

ராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களிலும் விவசாயிகளுக்கு தேவையான அளவு உரம் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக ராமநாதபுரம் மண்டல கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர் ஆரோக்கிய சுகுமார் வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. மிளகாய்,பருத்தி மற்றும் காய்கறிகள் பயிரிட்ட விவசாயிகள் தங்களுக்கு தேவையான யூரியா,டி.ஏ.பி.காம்ப்ளக்ஸ் மற்றும் பொட்டாஷ் உரங்களை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும்,பரமக்குடி,கமுதி,திருவாடானை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களிலும் அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் யூரியா-1050, டி.ஏ.பி.1015,காம்ப்ளக்ஸ்-625 டன் மற்றும் பொட்டாஷ்-21000 மெ.டன் உரங்கள் இருப்பில் உள்ளன. எனவே விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்களை அவரவர்க்குரிய கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு செய்திக்

குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**ராமநாதபுரத்தில் பலத்த மழை**

ராமநாதபுரத்தில் புதன்கிழமை அதிகாலையிலிருந்து மாலை வரை தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக ராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் உள்ள துறைமுக அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை மூன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டிருந்தது. மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் ராமநாதபுரத்தில் புதன்கிழமை அதிகாலை முதலே மேகமூட்டத்துடன் கூடிய பலத்த மழை பெய்யத் தொடங்கியது.

காலையில் பள்ளி,கல்லூரிகளுக்கு செல்லும் மாணவ,மாணவியர் மற்றும் அலுவலகங்களுக்கு செல்லும் அரசு ஊழியர்கள் மிகுந்த அவதிக்கு உள்ளாகினர். அதிகாலையில் பெய்யத் தொடங்கிய மழை தொடர்ந்து மாலை வரை பெய்து கொண்டே இருந்ததால் நகரில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8 மணி நிலவரப்படி மழை நிலவரம்:(அளவு மி.மீட்டரில்)

ராமநாதபுரம்-15.20, ராமேசுவரம்-52.20, பரமக்குடி-12, கமுதி-5.50,திருவாடானை-15.50, தொண்டி-28.40, மண்டபம்-20.60, கடலாடி-7, பாம்பன்-23.90, ஆர்.எஸ்.மங்கலம்-20, தங்கச்சி மடம்-23.40, வட்டாணம்-12, வாலிநோக்கம்-10.20, பல்லமோர்குளம்-12,தீர்த்தாண்டதானம்-16.

மாவட்ட அளவில் மொத்த மழையளவு- 273.90 மி.மீ. சராசரி மழையளவு-17.12. மி.மீ.

**கால்நடைச் சந்தைகள் மீண்டும் செயல்பட அனுமதி**

கோமாரி நோய் காரணமாக மூடப்பட்ட கால்நடைச் சந்தைகளை உரிய உயிர் நோய்த் தடுப்பு முறைகளைப் பின்பற்றி செயல்பட, ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் அனுமதியளித்துள்ளார்.

கோமாரி நோய் காரணமாக பசு, எருமை மற்றும் எருதுகளில் நோய்த் தாக்கம் ஏற்பட்டு தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் கால்நடை இறப்பு ஏற்பட்டது.

நோயின் தாக்கத்தையும், இறப்பையும் கட்டுப்பாட்டில் கொண்டு வர வாராந்திர கால்நடைச் சந்தைகளை தாற்காலிகமாக மூட மாவட்ட நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனிடையே, தற்சமயம் கால்நடைகளில் கோமாரி நோயின் தாக்கம் கண்டறியப்படாததாலும், நோய் பரவும் அபாயம் நீங்கிய காரணத்தைக் கருத்தில் கொண்டும் தாற்காலிகமாக மூடப்பட்ட பொள்ளாச்சி, துடியலூர், அன்னூர், போளுவாம்பட்டி கால்நடைச் சந்தைகள் மீண்டும் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

உரிய உயிர் நோய்த் தடுப்பு முறைகளைப் பின்பற்றி கால்நடைச் சந்தைகள் செயல்படலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

### நாற்றுப் பண்ணைகளில் தேங்கிக் கிடக்கும் தென்னங் கன்றுகள்

வறட்சி காரணமாக வெள்ளக்கோவிலிலுள்ள நாற்றுப் பண்ணைகளில் ஏராளமான தென்னங்கன்றுகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன.
வெள்ளக்கோவிலை சுற்றியுள்ள, முத்தூர், மங்களப்பட்டி, மூத்தாம்பாளையம், புதுப்பை, உத்தமபாளையம், லக்கமநாயக்கன்பட்டி, ஓலப்பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் அதிகளவு தென்னை மரங்களை வளர்த்து வருகின்றனர். இதனால், இப்பகுதியில் தென்னங் கன்றுகளின் தேவை அதிகளவில் இருக்கும். இவ்வாறு தேவைப்படுபவர்கள் நாற்றுப் பண்ணைகளில் கிடைக்கும் வீரிய ஒட்டு ரகங்களை விரும்பி வாங்குவர். ஆனால், தற்போது நிலவி வரும் தொடர் தண்ணீர் பிரச்னை காரணமாக புதிய தோப்புகளை உருவாக்க யாரும் முன் வருவதில்லை. இதனால், நாற்றுப் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வரும் தென்னங் கன்றுகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. இந் நிலையில், கன்றுகள் வளர்ப்பதற்குப் பயன்படாமல் வீணாகி வருவதால், தங்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டு வருவதாக நாற்றுப் பண்ணை உரிமையாளர்கள் கூறுகின்றனர். தற்போது ஒரு கன்று ரூ. 35-க்கு விற்கப்படுகிறது.

### ஆட்டுச் சந்தைகள் இயங்க ஆட்சியர் அனுமதி

திருவண்ணாமலை மாவட்டத்தில் தடை செய்யப்பட்டிருந்த ஆட்டுச் சந்தைகள், மீண்டும் இயங்க ஆட்சியர் அ.ஞானசேகரன் அனுமதி வழங்கியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கோமாரி நோய்த் தாக்குதல் அதிகரித்ததையடுத்து, 2013 நவம்பர் 17 முதல் கால்நடைச் சந்தைகளுக்கு தடை விதிக்கப்பட்டது. இப்போது மாவட்டத்தில் கோமாரி நோய்க்கான அறிகுறிகள் இல்லை. இந்நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளும் பூரண குணமடைந்துள்ளன.

எனவே, கோமாரி நோய்த் தாக்குதல் மீண்டும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், பொதுமக்களின் நலன் கருதியும் மாவட்டத்தில் ஆட்டுச் சந்தைகள் மட்டும் மீண்டும் இயங்க ஆட்சியர் அ.ஞானசேகரன் அனுமதி வழங்கி உள்ளார்.

## விளைநிலங்களில் எரிவாயு குழாய் பதிப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

விளைநிலங்கள் வழியாக எரிவாயு குழாய் பதிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாமக்கல்லில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு வஉசி பேரவையின் சார்பில், ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அமைப்பின் மாநிலத் தலைவர் சுப்புராஜ் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் கடலை.ராமசாமி முன்னிலை வகித்தார்.

விவசாய நிலங்கள் வழியாக எரிவாயு குழாய் கொண்டு செல்லும் திட்டத்தை கெயில் நிறுவனம் உடனடியாக கைவிட்டு தேசிய நெடுஞ்சாலை வழியாகக் கொண்டு செல்ல வேண்டும். இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள மேல்முறையீட்டு வழக்கில் தமிழக அரசு தகுந்த விளக்கங்கள் அளித்து, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.அமைப்பின் மாநில நிர்வாகிகள் ராமராஜேந்திரன், தமிழ்ச்செல்வன், ராமநாதபுரம் மாவட்டத் தலைவர் சூரியபிரகாஷ், ஈரோடு மாவட்டத் தலைவர் அன்பு ராமஜெயம் உள்பட பல மாவட்டங்களின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தியிடம் மனு அளிக்கப்பட்டது.

## பொங்கல் பண்டிகை: கிராமங்களில் விளையாட்டுப் போட்டிகள்

தை பொங்கல் பண்டிகையையொட்டி, நாமக்கல் மாவட்டம் முழுவதும் ஊராட்சி அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

கிராமப்புற இளைஞர்களிடையே விளையாட்டின் சிறப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட தமிழக அரசு சார்பில் ஆண்டுதோறும் கிராம ஊராட்சி அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. நிகழாண்டு இந்தப் போட்டிகள் நாமக்கல் மாவட்டத்தில் ஜனவரி 2-ஆம் தேதி தொடங்கி 8-ஆம் தேதி வரை நடத்தப்பட்டன.

மாவட்டத்தில் மொத்தமுள்ள 322 ஊராட்சிகளில் முதல்கட்டமாக 80 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் ஆண், பெண்களுக்கு தனித் தனியாகக் கைப்பந்து, கபடி, கால்பந்து ஆகிய போட்டிகளும், 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் ஓட்டப் பந்தயம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், வட்டு எறிதல் ஆகிய தடகளப் போட்டிகளும் நடத்தப்பட்டன. போட்டிகளில் அந்தந்த கிராமங்களைச் சேர்ந்த 30 வயதுக்கு உள்பட்ட ஆண்கள், பெண்கள் பெருமளவில் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு விரைவில் நடைபெற உள்ள பரிசளிப்பு விழாவில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன. வெற்றி பெற்ற வீரர்கள் தொடர்ந்து ஒன்றிய அளவிலான போட்டிகளில் பங்கேற்கவும் தகுதி பெற்றுள்ளனர்.

### முட்டை விலை ஒரே நாளில் 20 காசுகள் சரிவு

முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் வியாழக்கிழமை ஒரே நாளில் 20 காசுகள் குறைக்கப்பட்டது. வட மாநிலங்களில் முட்டை விலை குறைக்கப்பட்டு வருவதே இதற்குக் காரணம் என்று நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) தெரிவித்துள்ளது.

முட்டை விற்பனையில் புதிய நடைமுறையை நாமக்கல் மண்டல என்இசிசி ஜனவரி 1 முதல் அமல்படுத்தியுள்ளது. இதன்படி, முட்டை கொள்முதல் விலையில் ஒதுக்கப்பட்டு வந்த வியாபார கழிவுத்தொகை ஒதுக்கப்படாமல் என்இசிசி அறிவிக்கும் விலைக்கே பண்ணைகளில் இருந்து முட்டை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தப் புதிய நடைமுறை அமலாக்கப்பட்டது முதல் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை ரூ.3.60 ஆக இருந்தது.

இந்த நிலையில் வியாழக்கிழமை நடைபெற்ற நாமக்கல் மண்டல என்இசிசி ஆலோசனைக் கூட்டத்தில், ஒரேயடியாக 20 காசுகள் குறைக்கப்பட்டு, முட்டை பண்ணைக் கொள்முதல் விலை ரூ.3.40ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் மண்டல என்இசிசி தலைவர் பி.செல்வராஜ் கூறியது:

நாடு முழுவதும் காய்கறிகளின் விலை, குறிப்பாக வெங்காயம், தக்காளி, உருளைக் கிழங்கின் விலை பரவலாகக் குறைந்துள்ளதால், வட மாநிலங்களில் முட்டை விற்பனையில் சற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, விஜயவாடா, ஹைதராபாத், பர்வாலா, மும்பை, தில்லி, கொல்கத்தா பகுதிகளில் கடந்த கூட்டத்தை ஒப்பிடுகையில் 12 முதல் 20 காசுகள் வரை முட்டை கொள்முதல் விலை குறைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, நாமக்கல் மண்டலத்திலும் விலை குறைப்பு செய்தால் மட்டுமே சென்னை, பெங்களூரு பகுதிகளுக்கு நாமக்கல் முட்டைகளை அனுப்ப இயலும் என்பதால், முட்டை கொள்முதல் விலையை 20 காசுகள் குறைத்து ரூ.3.40ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

பிற மண்டலங்களில் விலை நிலவரம்: சென்னை -ரூ.3.90, பெங்களூரு -ரூ.3.90, மைசூரு -ரூ.3.80, ஹைதராபாத் -ரூ.3.65, மும்பை -ரூ.4.03, விஜயவாடா -ரூ.3.67, கொல்கத்தா -ரூ.4, பர்வாலா -ரூ.3.72, தில்லி -ரூ.3.93.

### ஏரியில் மீன் பிடிக்கும் பணி தொடக்கம்

கிருஷ்ணகிரியை அடுத்த அவதானப்பட்டி ஏரியில் நீதிமன்ற உத்தரவுபடி, மீன் பிடிக்கும் பணி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

கிருஷ்ணகிரியை அடுத்த அவதானப்பட்டி ஏரியில் மீன் பிடிக்க ஏலம் எடுப்பதில், அந்தப் பகுதியைச் சேர்ந்த திருப்பதி கவுண்டருக்கும், முனியப்ப கவுண்டருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதுகுறித்து இரு தரப்பினருக்கும் இடையே அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தை கூட்டத்திலும் மோதல் ஏற்பட்டதால், மாவட்ட நிர்வாகம் ஏரியில் மீன் பிடிக்கத் தடை விதித்தது.

இதுதொடர்பாக முனியப்ப கவுண்டர் தரப்பினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இவர்களது தரப்பைச் சேர்ந்த மீனவர் கூட்டுறவுச் சங்க பொன்னுசாமி உள்ளிட்ட 17 பேருக்கு மீன் பிடிக்க நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இதையடுத்து, ஏரியில் மீன் பிடிக்கும் பணி செவ்வாய்க்கிழமை தொடங்கியது. இந்தப் பகுதியில், மீண்டும் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கையாக அங்கு போலீஸôர் குவிக்கப்பட்டனர்.

**அதிக விலை, மாற்று பூச்சிமருந்து கொடுத்தால் கடும் நடவடிக்கை**

பூச்சிமருந்தை கூடுதல் விலைக்கு விற்றாலோ, விவசாயிகள் கேட்கும் மருந்தை தவிர வேறு மருந்தை மாற்றி கொடுத்தாலோ, பூச்சிமருந்து கடையின் உரிமம் ரத்து செய்யப்படும் என வேளாண் துறை எச்சரித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் சம்பா நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது நெற்பயிரில் சாம்பல் நோய், பாக்டீரியல் இலைகருகல் மற்றும் இலைப்புள்ளி ஆகிய நோய்கள் தாக்கியுள்ளன.

இந்நோய்களைக் கட்டுப்படுத்த பல்வேறு மருந்துகளை வேளாண் துறை பரிந்துரை செய்துள்ளது.

இந்நிலையில், விவசாயிகள் கேட்கும் மருந்துகளைத் தராமல் மாற்றாக வேறு மருந்தைத் தருவதாகவும், கூடுதல் விலைக்கு கடைக்காரர்கள் விற்பனை செய்து வருவதாகவும் விவசாயிகளிடம் இருந்து புகார்கள் வருகின்றன.

எனவே, பூச்சி மருந்துகளை கூடுதல் விலைக்கு விற்பனை செய்வது மற்றும் தவறான மருந்து கொடுக்கும் பூச்சி மருந்து விற்பனையாளர்களின் உரிமங்களை பயிர் பாதுகாப்புச் சட்டம் (1968) மூலம் ரத்து செய்வதுடன், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுகுறித்து விவசாயிகள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலகங்கள், புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் புகார் தெரிவிக்கலாம்.

### கோடைபருவ சாகுபடி முனைப்பு இயக்கம்

பொன்னமராவதி அருகே உள்ள கண்டியாநத்தம் ஊராட்சியில் வேளாண் துறை சார்பில் கோடைபருவத்தில் பயறு வகை பயிர்களின் சாகுபடியை அதிகரிப்பதற்கான முன்பருவ முனைப்பு இயக்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதும் வரும் கோடை பருவத்தில் பயறுவகை பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகப்படுத்தி பயறு விளைச்சலை பெருக்கவேண்டும் என தமிழக அரசின் வேளாண்மை துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நடைபெற்ற முனைப்பு இயக்கத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தலைமை வகித்து பயறு வகை பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். கண்டியாநத்தம் ஊராட்சித் தலைவர் ப. முருகேசன் முன்னிலை வகித்தார். தொடர்ந்து, பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வேளாண்மை அலுவலர் ரமேஷ், பயறு வகை பயிர்களின் வகைகள் குறித்து துணை வேளாண்மை அலுவலர் எலிசபெத்ராணி ஆகியோர் விளக்கினர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் குமாரசாமி, மணிமுத்து ஆகியோர் செய்திருந்தனர். உதவி வேளாண்மை அலுவலர் அருளானந்தம் நன்றி கூறினார்.

### நாகை மாவட்டத்தில் அரிய வகை கடல் ஆமை முட்டைகள் சேகரிப்பு

நாகை மாவட்ட கடலோரப் பகுதியில் அரிய வகை கடல் ஆமை முட்டைகள் சேகரிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நிகழாண்டில் இதுவரை சுமார் ஆயிரம் முட்டைகள் சேகரிக்கப்பட்டு செயற்கை முறை பொரிப்பகங்களில் வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வன உயிரின காப்பாளர் செ. மீனாட்சி தெரிவித்தார்.

இதுகுறித்து நாகை மாவட்ட வன உயிரின காப்பாளர் செ. மீனாட்சி வியாழக்கிழமை வெளிட்ட  செய்திக் குறிப்பு:

அரிய வகை கடல் ஆமை இனமான ஆலிவ் ரிட்லி டிசம்பர் முதல் ஏப்ரல் வரையிலான காலங்களில் இனப் பெருக்கத்துக்காக கோடியக்கரை உள்ளிட்ட தமிழக கடலோரப் பகுதிகளுக்கு வந்து முட்டையிடும். அந்த முட்டையிலிருந்து சுமார் 41 நாள்களுக்குப் பிறகு இயற்கையாகவே குஞ்சுகள் வெளிவந்து, தானாகவே கடலுக்குள் சென்றுவிடும். இதுபோன்ற முட்டைகள் பலநேரங்களில் நாய், நரி போன்ற விலங்குகளாலும், சமூக விரோதிகளாலும் சேதப்படுத்தப்படுவதைக் கருத்தில் கொண்டு, செயற்கை முறையில் குஞ்சுகளை பொரிக்கச் செய்து கடல் ஆமை இனங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, கோடியக்கரை, ஆறுகாட்டுத்துறை, தரங்கம்பாடி உள்ளிட்ட 12 இடங்களில் செயற்கை முறை பொரிப்பகங்கள் அமைக்கப்பட்டு, வனத்துறை மூலம் பராமரிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் கோடியக்கரை முதல் கொள்ளிடம் வரையில் உள்ள கடலோரத்தில் சேகரிக்கப்பட்ட முட்டைகள் பொரிப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளிவந்ததும் கடலில் விடப்படும். முட்டைகளை கடலோரங்களில் கண்டால் அதுகுறித்த தகவலை கீழ்க்கண்ட வனச் சரக அலுவலர்களுக்கு தெரிவிக்கலாம்.

வனச்சக அலுவலர் எண் சீர்காழி -9443525111, வேதாரண்யம் -9443649119.

**சீர்காழியில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

சீர்காழியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் பயிர்க் காப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்கக் கோரி வியாழக்கிழமை மாலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்(இந்திய கம்யூனிஸ்ட் சார்பு) ஒன்றியச் செயலர் கி. வரதராஜன் தலைமை வகித்தார். இந்திய கமியூனிஸ்ட் மாவட்ட துணைச் செயலர் அ. சீனிவாசன், ஒன்றியச் செயலர் மு. செல்லப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் ஒன்றிய துணைச் செயலர் கு. செல்வராஜ், வே. நீதிசோழன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பாசன வாய்க்கால் உடைப்பு: விவசாயிகள் பாதிப்பு

காட்டுமன்னார்கோவில் அருகேயுள்ள பாசன வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டதால், உளுந்து பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். காட்டுமன்னார்கோவில் அருகேயுள்ள வடக்குராஜன் வாய்க்காலில் ம.புளியங்குடி கலுங்கில் என்ற பகுதியில் இருந்து பிரிகிறது புஞ்சை வாய்க்கால். இந்த வாய்க்கால் மூலம் அதங்குடி, பிள்ளையார்தாங்கள் கிராமத்தில் சுமார் 200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டு, கடந்த 10 நாள்களாக தண்ணீர் வடக்குராஜன் வாய்க்காலில் கலக்கிறது. இதனால் நெல் அறுவடைக்கு முன் உளுந்து, பயிர் விதைப்புக்கு தண்ணீர் பாய்ச் முடியாமல் ஆயில் இன்ஜின் மூலம் நீர் பாய்ச்சு வருகின்றனர்.

இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் கவனத்துக்கு கொண்டு சென்றும் இதுவரை உடைப்பு சரி செய்யப்படவில்லை என்கிறார் கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி.

### அமெரிக்காவில் கடும் குளிர்: உலக வெப்பமயமாதலின் விளைவே காரணம் என ஐரோப்பிய விஞானிகள் கருத்து



அமெரிக்காவில் இந்த ஆண்டு வரலாறு காணாத கடும் குளிர் நிலவுகிறது. இதற்கான காரணம் குறித்து ஐரோப்பிய அறிவியலாளர்கள் குழு ஆராய்ந்து வருகிறது. இக்குழுவின் அறிக்கையின்படி, வட துருவப் பகுதிகள் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு வெப்பம் கொண்டதாக உள்ளன. உலக வெப்பமயமாதலின் விளைவு தான் இது.

இனி வரும் ஆண்டுகளில் அமெரிக்கா உட்பட்ட சில நாடுகளில் இந்த காலகட்டங்களில் கடுங்குளிர், பயங்கர பனிப்பொழிவு நீடிக்கும் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

தென் தமிழகத்தில் பரவலாக மழை

சென்னை: காற்றழுத்த தாழ்வு பகுதி வலுகுறைந்து, லட்சத்தீவுகள் அருகில் நிலை கொண்டிருப்பதால், தென் தமிழகத்தில், ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில், உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், சில தினங்களுக்கு முன், இலங்கையின் கிழக்கு கடற்கரை பகுதியில் கரையை கடந்து, தொடர்ந்து, மேற்கு நோக்கி நகர்ந்தது.

இதனால், தென் தமிழகம் மற்றும் டெல்டா பகுதிகளில், கடந்த சில தினங்களாக, மழை பெய்து வருகிறது.

கரையை கடந்த, காற்றழுத்த தாழ்வு மண்டலம், வலுகுன்றி, மன்னார் வளைகுடாவை கடந்து, தற்போது, காற்றழுத்த தாழ்வு பகுதியாக, லட்சத்தீவுகள் அருகில் நிலை கொண்டு, தொடர்ந்து வலுகுன்றி வருகிறது.

இதனால், அடுத்த, 24 மணி நேரத்தில், தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். வட தமிழகம் உட்பட மற்ற பகுதிகளில், வறண்ட வானிலையே நிலவும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. காற்றழுத்த தாழ்வு பகுதி, மன்னர் வளைகுடா பகுதியில் நிலை கொண்டிருந்த நிலையில், கடந்த, 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, பாபநாசம், 18 செ.மீ., மணிமுத்தாறு, 12, மயிலாடி, 8, ராதாபுரம், 6, அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி, குளச்சல், நாகர்கோவிலில், 5 செ.மீ., மழையும் பதிவாகியுள்ளதாகவும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## கோழி வளர்ப்பை ஊக்குவிக்க ரூ.37 லட்சத்தில் "பொரிப்பகம்'

உடுமலை :உடுமலை அருகே, கால்நடைத்துறை சார்பில், கோழி வளர்ப்பை கிராமங்களில் ஊக்குவிக்கும் வகையில், குஞ்சு பொரிப்பகம் அமைக்க, 37 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கியுள்ளன.

உடுமலை சுற்றுப்பகுதி, கிராமங்களில், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக்காக கோழியினங்கள் வளர்க்கப்படுகின்றன. இத்தொழிலை மேம்படுத்தும் வகையில், கால்நடைத்துறை சார்பில், மேற்குத்தொடர்ச்சிமலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குஞ்சு பொரிப்பகம் அமைக்க 37 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியில், குறிச்சிக்கோட்டை கால்நடை மருந்தக வளாகத்தில், குஞ்சு பொரிப்பகத்திற்கான கட்டடம் கட்டும் பணிகள் துவங்கியுள்ளது. இதற்கான பூமி பூஜையில், மடத்துக்குளம் எம். எல்.ஏ., சண்முகவேலு தலைமை வகித்தார். கால்நடைத்துறை உதவி இயக்குநர் வாசுதேவன் முன்னிலை வகித்தார். பி.டி.ஓ., க்கள் செல்வராஜ், கோவிந்தராஜ் வரவேற்றனர்.

கால்நடைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

குறிச்சிக்கோட்டையில், அமைக்கப்படும் குஞ்சு பொரிப்பகத்திற்கு, கட்டடம் கட்ட 25 லட்ச ரூபாயும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களுக்கு, 12 லட்ச ரூபாயும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இப்பொரிப்பகம், 15 ஆயிரம் முட்டைகள் பொரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். 21 நாட்களுக்கு ஒரு முறை, பொதுமக்கள் அளிக்கும் முட்டைகள் பொரிப்பகத்தில், இருப்பு வைக்கப்பட்டு, குஞ்சுகளாக வழங்கப்படும்.

இதனால், கிராம மக்கள் கோழி வளர்ப்பை கூடுதலாக்க முடியும். மாநிலத்தில் நான்கு இடங்களில் மட்டுமே இத்தகைய பொரிப்பகங்கள் உள்ளன. இதற்கான பணியாளர்கள் அரசினால், தனியாக நியமிக்கப்படுவார்கள்.

இவ்வாறு கூறினர்.

## விலை உயரும் எலுமிச்சைப் பழம்கோடைக்கு முன்பே தட்டுப்பாடு

கரூர்: "தமிழகத்தில் கடந்தாண்டு பருவமழை தவறியதால், கோடைகாலம் துவங்கும் முன், எலுமிச்சை பழத்தின் வரத்து குறைந்துள்ளது. இதனால், வரும் கோடைக்காலத்தில் எலுமிச்சை பழத்தின் விலை ஜெட் வேகத்தில் உயரும்' என, எதிர்பார்க்கப்படுகிறது.கடந்தாண்டு தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் தென் கிழக்கு பருவ மழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், நெல், பயறு வகைகள் உள்ளிட்ட உணவு தானியங்களின் உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது.பருவ மழை தவறியதால், எலுமிச்சை பழத்தின் சாகுபடி குறைந்துள்ளது. தற்போது தமிழகத்தில் திண்டுக்கல், மதுரை, சேலம் மற்றும் ஆந்திரா மாநிலங்களில் இருந்தும் எலுமிச்சை பழம். கரூர் மாவட்டத்துக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.கடந்த மாதம் கிலோ, 50 ரூபாய் முதல் 70 ரூபாய் வரை விற்கப்பட்ட எலுமிச்சை பழம், சில்லறையில் ஒரு பழம், இரண்டு ரூபாய் முதல், மூன்று ரூபாய் வரை விற்கப்பட்டது.கோடைகாலம் துவங்க இன்னும் ஒரு மாதம் உள்ள நிலையில், கரூர் மாவட்டத்துக்கு வழக்கமாக வரும் எலுமிச்சை பழம் வரத்து குறைந்துள்ளது. இதனால் மொத்த விலையில் தரத்துக்கு ஏற்ப கிலோவுக்கு, 20 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:எலுமிச்சை பழம் பொதுவாக மானாவரி நிலம், தோட்டப்பகுதிகள், வாய்க்கால் ஓரங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்தை பொறுத்தவரை எலுமிச்சை பழங்கள் சாகுபடிக்காக, தனியாக தோட்டம் அமைப்பது குறைவு. மழையை நம்பிதான், எலுமிச்சை பழம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால், கடந்தாண்டு போதிய மழை இல்லாததால், எலுமிச்சை பழம் சாகுபடி குறைந்து விட்டது. கரூர் மாவட்டத்தில் எலுமிச்சை பழம் சாகுபடி இல்லை.இதனால், கரூருக்கு குறைந்தளவே எலுமிச்சை பழம் விற்பனைக்கு வருகிறது. இதனால், விலையும் சற்று அதிகரித்துள்ளது. வழக்கமாக ஆண்டுதோறும் கோடைக்காலம் ஆரம்பித்த பிறகுதான், எலுமிச்சை பழத்தின் விலை அதிகரிக்கும். ஆனால் கோடைகாலம் தொடங்கும் முன்பே தற்போது, விலை அதிகரித்துள்ளது. வரும், ஃபிப்ரவரி கோடைக்காலத்தின் பாதிப்பு அதிகளவில் இருக்கும் நிலையில், எலுமிச்சை பழத்தின் விலை மேலும் உயர வாய்ப்புண்டு. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வைக்கோலை தொடர்ந்து பிற தீவனங்களும் மானியத்தில் வழங்க...எதிர்பார்ப்பு கால்நடைகளை வளர்க்க சிரமப்படும் விவசாயிகள்

திண்டுக்கல்:மானியத்தில் வைக்கோல் வழங்குவதை போன்று மாடுகளுக்கு தேவையான புண்ணாக்கு, பருத்திகொட்டை போன்றவற்றை வழங்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து மையங்களில் மானிய விலையில் வைக்கோல் வினியோகிக்கப்படுகிறது.

இதற்காக பதிவு செய்த விவசாயிகளுக்கு தீவன அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மையங்கள் தொலை தூரத்தில் இருப்பதால், போக்குவரத்திற்கு தனியாக செலவு செய்யும் நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான விவசாயிகளின் வீடுகளில் கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாளும் மாடுகளுக்கு ஒரு கிலோ மாட்டு தீவனம், அரை கிலோ கடலை புண்ணாக்கு, தவிடு, பருத்தி ஆகியவை தேவைப்படுகிறது.

இதற்கான செலவை கணக்கிடும்போது அவற்றை பராமரிப்பது சிரமமாக உள்ளது.

எனவே, வைக்கோலை மானியத்தில் வழங்குவதை போன்று மாட்டு தீவனங்களையும், அரசு வழங்க முன்வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.

விவசாயி ஆரோக்கியம் கூறுகையில்,""ஒரு மாட்டுக்கு 3 கிலோ வைக்கோல் வீதம் 15 கிலோ மட்டுமே தருகின்றனர். இது போதாது. பதிவு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் வைக்கோல் கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது," என்றார்.

இணை இயக்குனர்(பொறுப்பு) ரவிச்சந்திரன் கூறுகையில்,""பரிட்சார்த்த அடிப்படையில் வைக்கோல் வினியோகிக்கப்படுகிறது. மழை பெய்தால் இந்த மையங்கள் மூடப்பட்டு விடும்," என்றார்.

குளங்களில் கருவேல் மரக்கன்றுகள்நடப்படும்: தமிழக அமைச்சர் உறுதி

நாமக்கல்: ""தமிழகம் முழுவதும், பஞ்சாயத்து கட்டுப்பாட்டில் உள்ள குளங்களில், கருவேல் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும்," என, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் முனுசாமி தெரிவித்தார்.ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிர்வாகம் குறித்த, மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம், நேற்று, நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடந்தது. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் முனுசாமி தலைமை வகித்தார். தொழில்துறை அமைச்சர் தங்கமணி முன்னிலை வகித்தார். மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி வரவேற்றார்.கூட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் முனுசாமி பேசியதாவது:

தமிழக அரசு, ஊரக வளர்ச்சித் துறைக்கு, அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழகத்தில், ஒரு லட்சத்து, 28 ஆயிரம் கி.மீ., சாலைகள் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், அதில், 90 ஆயிரம் கி.மீ., சாலைகள் தரமுடையதாக உள்ளது. புதிய சாலைகள் அமைப்பதாக இருந்தால், மூன்று மாதத்திலும், பழைய சாலைகளை புணரமைப்பது என்றால், ஒரு மாதத்திற்குள் செய்து முடிக்க வேண்டும். தமிழகம் முழுவதும், அனைத்து ஊராட்சி யூனியன் மற்றும் பஞ்சாயத்து அலுவலகங்கள் சொந்த கட்டிடத்தில், தரமானதாக, வரும் இரண்டு ஆண்டுக்குள் கட்டித்தரப்படும். தமிழகத்தில் உள்ள பஞ்சாயத்துகளில், 28 ஆயிரம் குளங்கள் உள்ளன. அந்த குளங்களில், கருவேல் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும். சாலைகளில், பூச்செடிகள் நடவு செய்யப்படும். முதல்வரின் மரம் வளர்ப்புத் திட்டத்துக்கு, முக்கியத்தும் கொடுக்கப்படும்.பொதுமக்களுக்கான அடிப்படை தேவைகளை, வரும், மார்ச் மாதத்துக்குள் செய்து முடிக்க வேண்டும். பணிகளை விரைந்து முடிக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.ஊரக வளர்ச்சி முதன்மைச் செயலர் பழனியப்பன், இயக்குனர் பிஜேந்திரநவனிட், நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய ஐந்து மாவட்ட திட்ட இயக்குனர்கள், நாமக்கல் எம்.எல்.ஏ., பாஸ்கர், மாவட்டத் திட்டக்குழுத் தலைவர் காந்திமுருகேசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## கிருஷ்ணகிரி அணை உபரிநீர் திறக்காததால்...ஏமாற்றம்! திண்டல் ஏரியை நம்பிய விவசாயிகள் அதிருப்தி

காரிமங்கலம்: காரிமங்கலம் அடுத்த திண்டல் ஏரிக்கு, இந்த ஆண்டும் கிருஷ்ணகிரி அணை உபரி நீர் திறந்து விடப்படாததால், திண்டல் ஏரியை நம்பி இருந்த விவசாயிகள் ஏமாற்றத்தில் உள்ளனர்.

காரிமங்கலம் யூனியன் திண்டல் ஏரிக்கு, கிருஷ்ணகிரி அணையில் இருந்து உபரி நீரை, கால்வாய் மூலம் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென, அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதன்மூலம், திண்டல், பந்தாரஅள்ளி, காரிமங்கலம் பெரிய ஏரி, வண்ணான் ஏரி, கும்பாரஅள்ளி ஏரி, கொல்லுப்பட்டி ஏரி உட்பட, 30க்கும் மேற்பட்ட ஏரிகளில் தண்ணீர் வரத்து பெறுவதுடன், சுற்றுவட்டார பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் எனவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கடந்த அ.தி.மு.க, ஆட்சியின் போது, 7.14 கோடி ரூபாய் மதிப்பில், இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு, கால்வாய் மூலம் திண்டல் ஏரிக்கு, கிருஷ்ணகிரி அணை உபரி நீர் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் துவங்கிய சில ஆண்டுகளில், கிருஷ்ணகிரி அணை நிரம்பியதுடன், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில், உபரி நீர் திறந்து விடப்பட்டு, திண்டல் ஏரி உட்பட பல்வேறு ஏரிகள் தண்ணீர் வரத்து பெற்றது.

இதன் காரணமாக, நலிவடைந்த விவசாயம் ஓரளவுக்கு மேம்பட்டு, விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கடந்த இரண்டு ஆண்டாக, கிருஷ்ணகிரி அணையில் இருந்து, திண்டல் ஏரிக்கு உபரிநீர் திறந்து விடப்படாததால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயத்தை நம்பி இருந்த விவசாயிகள் பலரும், ஓசூர், பெங்களூரு பகுதிக்கு கூலி வேலைக்கு செல்ல வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டாவது தண்ணீர் திறந்து விடப்படும் என விவசாயிகள் அதிகம் எதிர்பார்த்த நிலையில், அணையின் உபரி நீர், கடந்த நவம்பர் மாதத்தில் திறந்து விடப்பட்டது. இதன்காரணமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஜெகதாப் ஏரி, கரகூர் ஏரி மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கும்பாரஅள்ளி கொள்ளுப்பட்டி

ஆகிய ஏரிகள் தண்ணீர் வரத்து பெற்றது. காரிமங்கலம் பெரிய ஏரிக்கு, சிறிது நாட்கள் மட்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டதால், பெரிய ஏரியில் தற்போது குட்டையாக காட்சி அளிக்கிறது.

திட்டத்தின் முக்கிய அம்சமாக உள்ள திண்டல் ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்படும் என விவசாயிகள் காத்திருந்த நிலையில், ஒரு நாள் மட்டும் திண்டல் ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு, திடீரென நிறுத்தப்பட்டது. இதனால், இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர். பல கோடி ரூபாய் மதிப்பில் திட்டம் கொண்டு வரப்பட்டும், எவ்வித பயனும் இல்லையென விவசாயிகள் குமுறி வருகின்றனர். இதுகுறித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்திடம் பல முறை புகார் தெரிவித்தும், மனுக்கள் அளித்தும், எந்த பயனும் இல்லை என விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பல ஆண்டுகளாக ஏரிகள் வறண்டு, விவசாயம் பாதிக்கப்பட்ட நிலையில், இந்தாண்டாவது முழுமையாக தண்ணீர் திறக்கப்படும் என காத்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியதால், திண்டல் ஏரியை நம்பி இருந்த விவசாயிகள் பொங்கலை கொண்டாட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

# தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகம் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும்




சென்னை: வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுக்குறைந்து அரபிக் கடல்நோக்கி நகர்ந்தது. இந்நிலையில் தென் தமிழகத்தில் காற்று சுழற்சி உள்ளது. இதன் காரணமாக நேற்று சில இடங்களில் மழை பெய்தது. அதிகபட்சமாக பாபநாசத்தில் 180 மிமீ மழை பெய்துள்ளது. இதையடுத்து, வளி மண்டல மேல் அடுக்கில் உள்ள காற்று சுழற்சி காரணமாக இன்றும் தமிழகம் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும். சென்னையில் ஒரு பகுதி மேக மூட்டம் காணப்படும். ஒரு பகுதி வறண்ட வானிலை காணப்படும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

### சீமை கருவேல மரங்களை தமிழகம் முழுவதும் அகற்றவேண்டும்



மதுரை: தமிழகம் முழுவதும் சீமை கருவேல மரங்களை அகற்ற கலெக்டர்களும், உள்ளாட்சி பிரதிநிதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது. மதுரை சம உரிமை அமைப்பின் செயல் இயக்குனர் ஆனந்தராஜ், ஐகோர்ட் கிளையில் தாக்கல் செய்த மனு: தமிழகம் முழுவதும் சீமை கருவேல மரங்கள் பரந்து காணப்படுகின்றன. மாநிலத்தில் மழை அளவு குறையவும், சுற்றுச்சூழல் மாசுபடவும் கருவேல மரங்கள் காரணமாக உள்ளன. விவசாயத்திற்கு பெரும் தடையாகவும் உள்ளன. கருவேல மரம் வளர்வதை தடுக்காவிட்டால், விவசாயம் மொத்தமாக அழிந்துவிடும்.

கருவேல மரம் மண்ணில் மலட்டு தன்மையை ஏற்படுத்துகிறது. நிலத்தடி நீர் மட்டத்தை உறிஞ்சுகிறது. கேரள மாநிலத்தில் சீமை கருவேல மரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வைகை ஆறு மற்றும் நீர் நிலைகளில் வளர்ந்துள்ள கருவேல மரங்களை அகற்ற உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை நீதிபதிகள் சுதாகர், வேலுமணி விசாரித்தனர். நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: அதிக தீமை தரும், நச்சுத்தன்மை கொண்ட சீமை கருவேல மரங்களை அழிப்பது தொடர்பாக தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குனர் பிரஜேந்திர நவ்நீத், அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் கடந்த அக்டோபர் 3ல் கடிதம் அனுப்பியுள்ளார். அந்த கடிதத்தின் அடிப்படையில் மாநிலத்தில் கருவேல மரங்களை அகற்ற அனைத்து கலெக்டர்களும், உள்ளாட்சி பிரதிநிதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 60 அடி**



மேட்டூர்: காவிரி டெல்டா பகுதிகளில் மழை பெய்வதால், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 6ம் தேதி வரை விநாடிக்கு 9 ஆயிரம் கனஅடியாக திறக்கப்பட்டு வந்த நீரின் அளவு, கடந்த 7ம் தேதி பிற்பகல் 2 மணி

முதல் விநாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. நீர்திறப்பு குறைக்கப்பட்டுள்ள நிலையில் அணைக்கு நீர் வரத்தும் சற்று அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் விநாடிக்கு 445 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை நிலவரப்படி விநாடிக்கு 652 கனஅடியாக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் நீர்மட்டம் 60.65 அடியாக இருந்தது. அணையில் இருந்து விநாடிக்கு 6000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டதால் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 60.02 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 24.70 டி.எம்.சி.

**தென்மாவட்டங்களில் கனமழை : குற்றாலம் அருவிகளில் வெள்ளம்**



நெல்லை: வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தென்மாவட்டங்களான நெல்லை, தூத்துக்குடி, குமரியில் கன மழை பெய்தது. இந்த மழையின் காரணமாக குற்றாலம் அருவிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த இரண்டு தினங்களாக நெல்லை, தூத்துக்குடி, குமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நல்ல மழை பெய்ததையடுத்து குற்றாலம் அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. மெயினருவியில் பாதுகாப்பு வளைவைத் தாண்டி தண்ணீர் கொட்டுகிறது.

பழைய குற்றாலத்தில் வெள்ளப்பெருக்கு காரணமாக படிக்கட்டுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் களக்காடு பகுதிகளில் மழையின் காரணமாக, நகரின் தாழ்வான இடங்களில் மழைநீர் குளம் போல் தேங்கியது. திருக்கல்யாணத்தெரு

கருத்த விநாயகர் கோயிலை சுற்றி மழைநீர் சூழ்ந்து நின்றது. களக்காடு மூணாறு பிரிவு அருகே நாங்குநேரியான் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டு, வெள்ளம் ஊருக்குள் புகுந்தது. நெல்¢லை, ராதாபுரம், நாங்குநேரி, பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் ம¤தமான மழை பெய்தது.

தற்போது மழை பெய்து அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நெல¢லை, தூத்துக்குடியில் கடந்த இரண்டு நாட்களாக விடிய, விடிய மழை பெய்ததால் தூத்துக்குடி மாவட்டத்தில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. குமரி மாவட்டத்தில் பெய்த மழையால் அப்பகுதி வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து மீண்டு, குளிர தொடங்கியது. நாகர்கோவில், வடசேரி திருப்பதி நகர் பகுதியில் வீடுகளை சுற்றிலும் மழைநீர் தேங்கியதால் அந்த பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மக்கள் வீடுகளைவிட்டு வெளியேற முடியாமல் தவித்தனர்.

திருப்பதிசாரத்தில் உள்ள இந்து சமய திருவாழ்மார்பன் கோயிலில் கடந்த 2 நாட்களாக மழை பெய்த நிலையில் கோயில் பிரகாரங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது.

பொற்றையடி வைகுண்டபதி அருகே பனை மரம் முறிந்து விழுந்ததால் மின் கம்பங்கள் சரிந்து சேதமடைந்தன. அணைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ள நிலையில் மாம்பழத்துறையாறு அணை உச்சநீர்மட்டத்தை எட்டி நிரம்பி வழிகிறது. மோசமான வானிலை காரணமாக தூத்துக்குடி, குமரி மாவட்ட மீனவர்கள் நேற்றும் மீன்பிடிக்க செல்லவில்லை.

### ரூ.19 ஆயிரம் கோடி மதிப்புக்கு கடல் உணவு பொருள் ஏற்றுமதி



சென்னை: கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமத் தலைவர் லீனா நாயர் சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது: கடல் பொருட்கள் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டில் ரூ.18,856 கோடியை எட்டியுள்ளது. கடந்த ஆண்டு ஏற்றுமதி ரூ.16,597 கோடியாகும். இதில் உறைநிலை இறால்கள் 51.35 சதவீதமாகும். மீன்கள் 35.05 சதவீதமாகும். உலர்ந்தவை 35.80 சதவீதம், பதப்படுத்தப்பட்டவை 26.27 சதவீதம். இந்திய கடல் உணவு பொருட்கள் ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா, சீனா, தென் கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதியாகின்றன. கடல் உணவுப் பொருள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமம், இந்திய கடல் உணவு பொருள் ஏற்றுமதியாளர்கள் சங்கம் சார்பில் சென்னையில் 12ம் தேதிவரை கடல் உணவு கண்காட்சி சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது என்றார்.

**அவிநாசி கூட்டுறவு சங்கத்தில் 1.40 கோடிக்கு பருத்தி ஏலம்**



அனுப்பர்பாளையம்: அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஒரு கோடியே 40 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. இந்த வாரம் நடந்த ஏலத்துக்கு 6,500 பருத்தி மூட்டைகள் வந்திருந்தன. இது சென்ற வாரத்தை விட 1,500 மூட்டை வரத்து அதிகரித்தது. மேலும் டி.சி.எச்.ரகப்பருத்தி குவிண்டாலுக்கு ரூ.200 வரை விலை அதிகரித்தது. அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. ஏலத்தில், குவிண்டால் ஒன்றுக்கு டி.சி.எச்.ரகப்பருத்தி ரூ.6,900 முதல் ரூ.7,350 வரையிலும், பென்னி ஆர்.சி.எச்.சுரபி-பி.டி.ரகப் பருத்தி ரூ.4,850 முதல் ரூ.5,395 வரையிலும், மட்டரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு

ரூ.2,600 முதல் ரூ.3,000 வரையிலும் ஏலம் போனது.
இதன் மொத்த மதிப்பு ஒரு கோடியே 40 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் பருத்தி ஏலம் நடைபெற்றது. இது குறித்து அவிநாசி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் கூறுகையில், ஒரு கோடியே 40 லட்சத்து 7ஆயிரம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. சென்ற வாரத்தை விட பருத்தி 1,500 மூட்டைகள் வரத்து அதிகரித்து இரு மடங்காக குவிந்தது. டி.சி.எச்.ரகப்பருத்தி குவிண்டாலுக்கு ரூ.200 வரை விலை அதிகரித்துள்ளது. டிசம்பரிலிருந்து பருத்தி சீசன் துவங்கி அறுவடை செய்யப்படுகிறது. தற்போது விலை, பருத்தி வரத்து மேலும் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது என்றார்.

**மாட்டுத்தாவணி நெல் வணிக வளாத்தில் பென்னிகுக் சிலை அமைக்க வணிகர் சங்கம் தீர்மானம்**

மதுரை, : மாட்டுத்தாவணி நெல் வணிக வளாகத்தில் பென்னிகுக் சிலை அமைக்க நெல், மலர், இடுபொருள் வணிக வளாக ஒருங்கிணைந்த சங்க ஆண்டு விழா பொதுக்குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
மதுரையில் மாட்டுத்தாவணி நெல், மலர், இடுபொருள் வணிக வளாக ஒருங்கிணைந்த சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடந்தது. சங்கத் தலைவர் ராஜா தலைமை வகித்தார். உரம், பூச்சிமருந்து சங்க தலைவர் பாண்டியராஜன் வரவேற்றார்.
கூட்டத்தில், ‘பென்னிகுக் சிலையை நெல் வணிக வளாகத்தில் அமைத்துக் கொள்ள அனுமதி அளிக்க வேண்டும். சங்க உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு பெற்ற கடைகளுக்கு விரைவில் பத்திர பதிவு செய்வது சம்பந்தமாக விற்பனை குழு செயலாளரை வலியுறுத்த வேண்டும். வணிக வளாகத்தில் வங்கி அமைக்க வேண்டும். முன்புற சாலை ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும். சுற்றுப்புற சுவர் அமைக்க வேண்டும். புதிதாக கட்டியுள்ள பூ கடைகளை ஒருங்கிணைந்த சங்க உறுப்பினர்களுக்கே ஒதுக்கீடு செய்ய வேண்டும். நேரடி விவசாய தொழில் செய்பவர்களுக்கு ரிசர்வ் வங்கி மூலம் 7 சதவீத கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கான உரவிலையை மத்திய அரசு 150 சதவீதம்

உயர்த்தி, மானியத்தை குறைத்து விவசாயிகளுக்கு சுமையை ஏற்படுத்தியுள்ளனர். வருங்காலங்களில் உரவிலையை பழைய மானியத்தை கொடுத்து பழைய விலைக்கே கொடுக்க வேண்டும்' என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் உணவு பொருள் வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜெயப்பிரகாசம், மாட்டுத்தாவணி நெல், மலர், இடுபொள் வணிக வளாக சங்க செயலாளர் ராமச்சந்திரன், பொருளாளர் மகாலிங்கம் உட்பட நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## இலை கருகல் நோயால் ஆயிரம் ஏக்கரில் மஞ்சள் சாகுபடி பாதிப்பு

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இலைக்கருகல் நோயால், 1000 ஏக்கரில் பயிரிட்டுள்ள மஞ்சள் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி, பர்கூர், சூளகிரி, ராயக்கோட்டை, ஓசூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. முதல்போக நெல் சாகுபடிக்கு பின்பு கிருஷ்ணகிரி சுற்றுவட்டார பகுதிகளிலுள்ள பர்கூர், ஒரப்பம், சின்னஒரப்பம், கந்திகுப்பம் உள்ளிட்ட பகுதிகளில் மட்டும் ஆயிரம் ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. இந்த பயிரை இலை கருகல் நோய் தாக்கியுள்ளது. நோய் தாக்கத்தால் இலைகள் காய்ந்தும், பூமிக்கடியில் உள்ள மஞ்சள் அழுகியும் உள்ளது. இது குறித்து சின்னஒரப்பம் கிராமத்தை சேர்ந்த மஞ்சள் விவசாயி வேட்ராயன் (45) கூறியது: லட்சக்கணக்கான ரூபாய் முதலீடு செய்து மஞ்சள் பயிர் நடவு செய்துள்ளோம். தற்போது பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் நிலையில், அறுவடைக்கு தயாராக இருந்த மஞ்சள் பயிரில் இலைக்கருகல் நோய் தாக்கியுள்ளது. போதிய அளவு தண்ணீர் இல்லாததால் இந்நோய் வருகிறது. ஒரு பயிருக்கு இந்த நோய் தாக்கினால் மொத்தமாக உள்ள அனைத்து மஞ்சளையும் இது பாதிக்கும். இதனால் மஞ்சள் அழுகிவிட்டது. இதை சந்தையில் விற்பனை செய்தால் பாதி விலை கூட கிடைக்காது. இனிவரும் காலங்களில் வேளாண்மை துறையின் உரிய வழிகாட்டுதல் இருந்தால், இதுபோன்ற நோய் தாக்கம் குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

**இறவை நிலக்கடலையில் கூடுதல் மகசூலுக்கு ஊட்டச்சத்து கரைசல் தெளிக்க ஆலோசனை**

அன்னவாசல், : புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள இறவை நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஊட்டச்சத்துக் கரைசல் இருமுறை தெளிக்க வேண்டுமென வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநா (பொ) சதானந்தம் மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது இறவை நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு பூக்கும் தருணத்தில் உள்ளது. பூக்கும் தருணத்தின்போது பூக்கள் உதிர்வதைத் தடுக்கவும், அதிகமாக பூக்கள் உருவாகவும், ஊட்டச்சத்துக் கரைசல் இலைவழியாகத் தெளிப்பது சிறந்ததாகும். ஒரு ஏக்கருக்குத் தேவையான ஒரு கிலோ டி.ஏ.பி. உரம், 400 கிராம் அம்மோனியம் சல்பேட் உரம் மற்றும் 200 கிராம் போராக்ஸ் ஆகிய 3 உரங்களையும் தெளிப்பதற்கு முதல் நாள் இரவே சுமார் 15 லிட்டர் நீரில் ஊற வைக்க வேண்டும். இக்கரைசலை அவ்வப்போது நன்கு கலக்கிவிட வேண்டும். மறுநாள் காலை இக்கரைசலை வடிகட்டி கிடைக்கும் தெளிந்த கரைசலை மட்டும் (13 லிட்டர்) எடுத்து அதனுடன் தேவையான அளவு நீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாகத் தயார் செய்ய வேண்டும். இக்கரைசலை கைத்தெளிப்பான் மூலம் விதைத்த 25ம் நாள் ஒரு முறையும், பின்பு 10 நாட்கள் கழித்து 35ம் நாள் ஒரு முறையும் என இரண்டு முறை இலைகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.

இக்கரைசலுடன் பிளானோபிக்ஸ் என்ற பயிர் வளர்ச்சி ஊக்கியை ஏக்கருக்கு 140 மி.லி. என்ற அளவில் கலந்தும் தெளிக்கலாம். ஊட்டச்சத்துக் கரைசலை நிலக்கடலைக்குத் தெளிப்பதால் பூக்கள் உதிர்வது தடுக்கப்படுகிறது. பூக்கள் அதிகமாகப் பூப்பதற்கு உதவுகிறது. நன்கு திரட்சியான பொக்கற்ற காய்கள் அதிகம் பிடித்து நல்ல மகசூல் கிடைக்கிறது.

பயிர் நன்கு வளர்ச்சி பெற்று பூச்சி நோய்களை எதிர்க்கும் தன்மையைப் பெறுகிறது. விவசாயிகள் பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்களை மட்டும் கரைசலுக்குப் பயன்படுத்த வேண்டும். தேவைக்கு அதிகமாக உரங்களைப் பயன்படுத்தும் போது செடிகள் பாதிக்க வாய்ப்புண்டு. ஊட்டச்சத்து கரைசலைத் தெளிக்கும்போது நிலத்தில் ஈரம் இருப்பது அவசியம். எனவே, இறவை நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் ஊட்டச்சத்துக் கரைசலைத் தெளி த்து கூடுதல் மகசூல் பெற லாம். இவ்வாறு அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்

**தலைஞாயிறு சர்க்கரை ஆலையில் 23ம் தேதி அரவை துவக்கம்**

மயிலாடுதுறை, : தலைஞாயிறு என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலை இந்த ஆண்டு அரவையை வரும் 23ம் தேதி துவக்க உள்ளது.

நாகை மாவட்டம் மயிலாடுதுறை அருகே உள்ள தலைஞாயிறு என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு விவசாயிகள் கூட்டம் ஆலை கோட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. ஆலை நிர்வாகக்குழு தலைவர் பூராசாமி தலைமை வகித்தார். கரும்பு அலுவலர் இளங்கோ வரவேற்றார்.

ஆலை கரும்பு அபிவிருத்தித் தலைவர் முனியசாமி கூறுகையில், ஆலையின் 2013-14ஆம் ஆண்டின் அரவை வரும் 23ம் தேதியில் துவங்க உள்ளது, நீடித்த கரும்பு சாகுபடி திட்டம், சொட்டுநீர் பாசனம் ஆகிய திட்டங்களை அங்கத்தினர்கள் அவசியம் கடைபிடித்து நல்ல மகசூலை பெறவேண்டும் என்றார்.

ஆலையின் நிர்வாக குழு தலைவர் பூராசாமி கூறுகையில், ஆலையின் அடிப்படைத்தேவை கரும்பு உற்பத்திதான். அதனை மேம்படுத்த அனைவரும் உழைக்க வேண்டும். சென்ற ஆண்டு கரும்பு நிலுவைத்தொகை வழங்கும்போது ஏற்பட்ட கடுமையான நிலை இந்த ஆண்டு வராமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, என்றார்.

கூட்டத்தில் நிர்வாகக்குழு இயக்குனர்கள் நடராஜன், ராஜசேகரன், லோகநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கோட்ட கரும்பு உதவியாளர்கள் சுப்ரமணியன், சந்திரசேகரன், முருகேசன், செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ரவி நன்றி கூறினார்.

**மானிய விலையில் கதிரடிக்கும் இயந்திரம்**

சாத்தூர், : மாநில அரசின் மானிய நிதியில் விவசாயிகளுக்கு பல்வகை கதிரடிக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது.

தமிழகத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் மா நில அரசு பல்வேறு திட்டங் களை செயல்படுத்தி வருகின்றது. இதில் தேசிய வே ளாண்மை பொறியியல் துறை சார்பாக கதிரடிக்கும் இயந்திரம் வாங்க ரூ.1 லட் சத்து 20 ஆயிரம் மானியமாக அரசு வழங்குகின்றது. இத்திட்டத்தின் கீழ் சாத்தூரில் கதிரடிக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது.தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட விவசாய குழு மாவட்ட தலைவர் இளங்கோவன் கதிரடிக்கும் இயந்திரத்தை விவசாயிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் தேசிய வேளாண்மைதுறை உதவி செயற்பொறியாளர் செல்வ ராஜ், உதவி பொறியாளர் சங்கரசுப்பு உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**ரூ76,678 ஏக்கரில் சம்பா சாகுபடி ஏக்கருக்கு ஆயிரம் கிலோ கூடுதல் நெல்**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரை கொண்டு கீழ்பவானி பாசனம்,

கொடிவேரி பாசனம் மற்றும் காலிங்கராயன் பாசனத்தின் கீழ் ஆண்டுதோறும் குறுவை மற்றும் சம்பா சாகுபடியின் கீழ் சுமார் 1 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த 2012ல் ஏற்பட்ட கடும் வறட்சியால் கொடிவேரி பாசனத்தின் கீழ் குறுவை நெல் சாகுபடி மட்டும் நடந்தது. கீழ்பவானி மற்றும் காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தின் கீழ் நெல் சாகுபடி நடைபெறவில்லை.

இதனால், தமிழக அளவில் டெல்டா மாவட்டங்களுக்கு அடுத்த இடத்தை பெறும் ஈரோடு மாவட்டம் நெல் உற்பத்தியில் மிகவும் பின்தங்கியது. கடந்த 2012ம் ஆண்டு போதிய மழை பெய்யாததால் பாசனம் பெரிதும் பாதித்தது.

இந்நிலையில், 2013ம் ஆண்டு ஓரளவு பெய்த தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையால் பாசனப்பகுதியில் நெல் சாகுபடி அமோகமாக இருந்தது.ஏற்கனவே ஒரு ஆண்டு வரை நெல் சாகுபடி செய்யாததால் கீழ்பவானி,

காலிங்கராயன், மேட்டூர் வலதுகரை பாசனப்பகுதியில் குறுவை மற்றும் சம்பா சாகுபடியும், கொடிவேரி பாசனத்தின் தடப்பள்ளி-அரக்கன் கோட்டை பாசனத்திற்குட்பட்ட பகுதிகளில் சம்பா சாகுபடியும் முற்றிலும் பாதிப்படைந்தது. கிட்டத்தட்ட ஒரு ஆண் டாக நிலங்கள் தரிசாக போடப்பட்ட நிலையில் இந்த ஆண்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதும் விவசாய பணிகளில் விவசாயிகள் மும்முரமாக இறங்கினர்.ஒரு ஆண்டாக தரிசாக போடப்பட்ட நிலத்தில் விவசாயம் செய் யும் போது எந்தப்பயிரை சாகுபடி செய்தாலும் நல்ல பலனை தரும் என்பது விவசாயிகளின் கணிப்பு.அந்த கணிப்பு இம்முறையும் தப்பவில்லை. ஆம்... வழக்கத்தை விட இம்முறை நெல் விளைச் சல் அமோகமாக உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இம்முறை சம்பா சாகுபடியின் கீழ் தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்தின் கீழ் 13750 ஏக்கரும், மேட்டூர் வலதுகரை பாசனத்தில் 11,250 ஏக்கரும், காலிங்கராயன் பாசனத்தில் 5,000 ஏக்கரும், கீழ்பவானி பாசனத்தில் 46,678 ஏக்கர் என மாவட்டம் முழுவதும் 76,678 ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக வேளாண்துறையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது, மாவட்டம் முழுவதும் பரவலாக நெல் அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது. பல இடங்களில் இயந்திரம் மூலமாக நெல் அறுவடை ஆகிறது. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு நெல் விளைச் சல் அமோகமாக உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

நெல் விளைச்சல் குறித்து விவசாயி ஒருவர் கூறுகை யில், வழக்கமாக ஒரு ஏக்கரில் 8 முதல் 10 பொதி நெல் தான் விளையும். ஆனால், ஒரு ஆண்டாக தரிசாக இருந்த நிலத்தில் நெல் சாகுபடி செய்யும் போது விளைச்சல் அமோகமாக உள்ளது. எனவே இந்த ஆண்டு ஒரு ஏக்கரில் குறைந்தபட்சம் 14 பொதி நெல் விளைந்துள்ளது. (ஒரு பொதி என்பது 260 கிலோ எடை). ஏறத்தாழ ஒரு ஏக்கருக்கு 3640 கிலோ நெல் விளைந்துள்ளது. கிட்டத்தட்ட ஏக்கருக்கு ஆயிரம் கிலோ நெல் கூடுதலாக விளைந்துள்ளதுள்ளதால் நடப்பாண்டில் நெல் பயிரிட்ட விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**மாவட்டத்தில் 2 நாட்களாக தொடர்மழை மிளகாய் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி**

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக தொடரும் மழையால் மிளகாய் பயிருட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்து விட்டது. பருவமழை, கண்மாய் பாசனத்தை நம்பி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஹெக்டேரில் விவசாயிகள் இந்த ஆண்டும் நெல் பயிரிட்டனர். தண்ணீர் இல்லாமல் தற்போது நெற்பயிர்கள் கருகி விட்டன. இதனால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர். பயிர் காப்பீடு செய்தும், இதுவரை விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை கிடைக்கவில்லை. இந்நிலையில் மாவட்டம் முழுவதும் கடந்த 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை முதல் வானம் இருண்டு மேகமூட்டமாக காணப்படுகிறது. சாரலாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இருப்பினும் நெற்பயிர்கள் முற்றிலும் கருகி விட்டதால் இந்த மழையால் பயனில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இதனால் மாவட்டத்தில் ஆர்.எஸ்.மங்கலம், பரமக்குடி, நயினார்கோயில், கமுதி, முதுகுளத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் 10 ஆயிரம் ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். வேளாண் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், “பருவமழை பொய்த்து நெல் சாகுபடி பாதித்துள்ள நிலையில், தற்போது பெய்து வரும் மழை, மிளகாய் சாகுபடிக்கு உகந்ததாக இருக்கும். தகுந்த நேரத்தில் உரமிட்டு மிளகாய் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுவதற்கு வேளாண்மை துறை ஆலோசனை வழங்கி வருகிறது“ என்றார். மாவட்டத்தில் பெய்த மழையளவு விபரம் (மி.மீட்டரில்) வருமாறு: ராமநாதபுரம்-15.6, ராமேஸ்வரம்-52.2. பாம்பன்-23.9, மண்டபம்-20.6, தங்கச்சிமடம்-23.4, தொண்டி- 28.4, பள்ளமோர்குளம்-12, திருவாடனை-15.5, ஆர்.எஸ்.மங்கலம்-20, தீர்த்தாண்டதானம்-16, வட்டடாணம்-12, பரமக்குடி-12, கமுதி-5.5, கடலாடி-7, வாலிநோக்கம்-10.2. மாவட்டத்தில் மொத்தம் 273.9 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60 அடியாக குறைந்ததால் தண்ணீரில் மூழ்கி இருந்த புராதன நினைவு சின்னங்கள் வெளியே தெரிகின்றன



சேலம்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60 அடியாக குறைந்ததால் தண்ணீரில் மூழ்கி இருந்த புராதன நினைவு சின்னங்கள் வெளியே தெரிந்தன.

மேட்டூர் அணை

மேட்டூர் அணையின் மொத்த கொள்ளளவு 120 அடியாகும். கடல்போல் காட்சி அளிக்கும் இந்த அணையின் நீர்மட்டம் தற்போது பாதியாக குறைந்து விட்டது. நேற்று அணையின் நீர்மட்டம் 60 அடியாக இருந்தது.

நீர்மட்டம் குறைந்ததைத்தொடர்ந்து நீர்தேக்க பகுதியில் மூழ்கி இருந்த இரட்டை கோபுரங்கள், நந்தி சிலை ஆகியன கடந்த சில நாட்களுக்கு முன்பு வெளியே தெரிய தொடங்கியது. இந்த நிலையில் பண்ணவாடி நீர்தேக்க பகுதியில் மூழ்கி இருந்த மற்றொரு புராதன நினைவு சின்னமான ஜலகண்டேஸ்வரர் கோவில் கோபுரமும் தற்போது வெளியே தெரிய தொடங்கி விட்டது.

<u>கிறிஸ்தவ இரட்டை கோபுரங்கள்</u>

பண்ணவாடி நீர்தேக்க பகுதியில் நந்தி சிலைக்கு பின்புறம் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஜலகண்டேஸ்வரர் கோவில் கோபுரத்தின் மேற்பகுதி சிதைந்த நிலையில் தற்போது வெளியே தெரிகிறது. நந்தி சிலை பீடம் வரை தெரிகிறது. தற்போது கிறிஸ்தவ இரட்டை கோபுரம் சுமார் 15 அடி வரை வெளியே தெரிந்து வருகிறது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருவதால் நீர் தேக்கப்பகுதிகளில் மூழ்கி இருந்த ராஜமண்டபம், கோட்டை உள்ளிட்ட புராதன சின்னங்களும் இனி மெல்ல, மெல்ல தெரிய வரும்.

**கார்ணாம்பூண்டி கிராமத்தில் 200 விவசாயிகளுக்கு கறவைமாட்டு கடன் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் வழங்கினார்**



கீழ்பென்னாத்தூர்,

கார்ணாம்பூண்டி கிராமத்தில் 200 விவசாயிகளுக்கு, அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரணியன் கறவைமாடு வாங்குவதற்கு கடன் வழங்கினார்.

கடன் வழங்கும் விழா

கீழ்பென்னாத்தூர் அடுத்த சிறுநாத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் நாரியமங்கலம் பால்உற்பத்தியாளர் கூட் டுறவு சங்கம், சிறுநாத்தூர் மகளிர் பால்உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு கறவைமாடுகடன், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சுயதொழில் கடன் உதவி, வட்டியில்லா பயிர் கடன் ஆகியவை வழங்கும் விழா கார்ணாம்பூண்டி கிராமத்தில் நடந்தது. விழாவுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் சி.தொப்பளான் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., கீழ்பென்னாத்தூர் ஏ.கே.அரங்கநாதன் எம்.எல்.ஏ., மொத்த விற்பனை பண்டக சாலை தலைவர் வி.பவன்குமார், தண்டராம்பட்டு நிலவள வங்கி தலைவர் எஸ்.ஆர்.தருமலிங்கம், பேரவை செயலாளர் கே.ராஜன், ஒன்றிய செயலாளர் ஆர்.பாஷ்யம், தொகுதி செயலாளர் எஸ்.தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். 200 விவசாயிகளுக்கு

விழாவில் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் கலந்து கொண்டு 200 விவசாயிகளுக்கு ரூ.50 லட்சம் கறவை மாட்டு கடன், 4 மகளிர் குழுக்களுக்கு நேரடி கடன் ரூ.9 லட்சம், 12 பேருக்கு வட்டியில்லா கடன் ரூ.6 லட்சம் மற்றும் விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:- முதல்-அமைச்சர் ஜெயலலிதா தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை திட்டங்களாக தீட்டி செயல்படுத்தி வருகிறார். நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

உறுதுணையாக மாவட்ட ஊராட்சி நிதி, ஒன்றிய பொதுநிதி ஆகியவை மூலமாக அனைத்து கிராமங்களிலும் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கல்வித்துறைக்காக மட்டும் 14 திட்டங்களை அறிவித்து மாணவர்களுக்கு மடிக்கணினி, சீருடைகள், சைக்கிள், பாடபுத்தகங்கள் வழங்கி வருகிறார்.

மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு, அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும். மேற்கண்டவாறு அமைச்சர் பேசினார்.

முன்னாள் அமைச்சர் எஸ்.ராமச்சந்திரன், இலக்கிய அணி செயலாளர் இ.என்.நாராயணன், அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் சுனில்குமார், தாசில்தார் வேடியப்பன், வேளாண்மை உதவி இயக்குனர் அக்கண்ட ராவ், கூட்டுறவு கடன்சங்க துணைத்தலைவர் சந்திரா ஆறுமுகம், இயக்குனர்கள், முன்னாள் ஒன்றிய செயலா ளர்கள் மோகன், முரளிமோகன் மற்றும் பலர் கலந்து கொண் டனர்.முடிவில் கூட்டுறவு கடன் சங்க செயலாளர் கமலக்கண் ணன் நன்றி கூறினார்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை ஒரே நாளில் 20 காசுகள் சரிவு 340 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல்

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று ஒரே நாளில் 20 காசுகள் சரிவடைந்து 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

<u>முட்டை விலை சரிவு</u>

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 360 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை

அதிரடியாக 20 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 340 காசுகளாக குறைந்து உள்ளது.

பிறமண்டலம்

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–390, ஐதராபாத்–365, விஜயவாடா, தனுகு–367, பார்வாலா–372, மும்பை–403, மைசூர்–380, பெங்களூர்–390, கொல்கத்தா–400, டெல்லி–393.

முட்டைக்கோழி கிலோ ரூ.57–க்கும், கறிக்கோழி கிலோ ரூ.70–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை. வடமாநிலங்களில் குளிர் குறைந்து வருவதால், அங்கு முட்டை விற்பனை சரிவடைந்து வருகிறது. இதனால் பிறமண்டலங்களில் முட்டையின் விலை குறைந்து உள்ளது. அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல் மண்டலத்திலும் முட்டையின் விலை குறைக்கப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். தமிழகத்தில் காய்கறி விலை குறைந்து இருப்பதும் முட்டைவிலை குறைப்புக்கு ஒரு காரணம் என கூறப்படுகிறது.

**நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 6500 மூட்டை பருத்தி ரூ.1¼ கோடிக்கு ஏலம்**



நாமக்கல்,

நாமக்கல் வேளாண்மை உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம் போனது.

<u>பருத்தி ஏலம்</u>

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்கத்தின் தலைவர் தென்னரசு, துணை தலைவர் நல்லதம்பி மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலை யில் பருத்தி ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப் பேட்டை, ராசிபுரம், பவித்தி ரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட் டங்களில் இருந்தும் விவசாயி கள் ஏறத்தாழ 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தியை விற்ப னைக்கு கொண்டு வந்திருந் தனர்.

<u>ரூ.1¼ கோடிக்கு விற்பனை</u>

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண் டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 600 முதல் ரூ.5 ஆயிரத்து 589 வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி ரூ.6 ஆயிரத்து 706 முதல் ரூ.7 ஆயிரத்து 610 வரைக்கும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங் கணாபுரம், சேலம், விருதுநகர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். கடந்த வாரம் இந்த சங்கத்துக்கு 5 ஆயிரம் மூட்டை பருத்தி ஏலத் துக்கு வந்தன. இந்த வாரம் கூடுதலாக ஆயிரத்து 500 பருத்தி மூட்டைகள் வந்துள் ளது குறிப்பிடதக்கது.

**குன்னூரில் கடந்த ஆண்டு 14 மில்லியன் கிலோ பச்சை தேயிலை அறுவடை உபாசி தேயிலை அதிகாரி தகவல்**



குன்னூர்,

குன்னூரில் கடந்தஆண்டு 14.06 மில்லியன் கிலோ கிராம் பச்சை தேயிலை அறுவடைசெய்யப்பட்டு உள்ளதாக உபாசி தேயிலை ஆராய்ச்சிஅதி காரி தெரிவித்து உள் ளார்.

<u>வடகிழக்கு பருவமழை</u>

நீலகிரி மாவட்டத்தில் கூட லூர், பந்தலூர், ஊட்டி ஆகிய தாலுகாக்களில் ஜூன், ஜூலை மாதங்களில் தென் மேற்கு பருவமழை அதிகளவு பெய்து வருகிறது. குன்னூர் பகுதியில் தென் மேற்கு பருவ மழை குறைந்த அளவே பெய் கிறது.ஒரு சில ஆண்டுகளில் குன் னூர் பகுதிகளில் தென் மேற்கு பருவமழை பெய்யாமலேயே பொய்த்து விடுகிறது. அதனால் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் பெய்யும் வடகிழக்கு பருவமழையே நம்பியே குன்னூர் மக்கள் உள்ளனர்.

இந்த நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக குன்னூர் மற் றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை குறைந்த அளவே பெய்து வருகிறது. இதன் காரணமாக நீர் நிலைகளில் தண்ணீர் குறைந்து குடிநீர் பிரச்சினை ஏற்பட்டு வந்தது.

இந்த ஆண்டு குன்னூர் பகுதியில் வடகிழக்கு பருவ மழை சராசரி அளவிற்கும் அதிகமாக பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வடகிழக்கு பருவ மழை குறைவாகவே பெய்தது.இதன் காரணமாக கடந்த 2012–ம் ஆண்டை விட 2013–ம் ஆண்டில் குறைவான மழை அளவே பதிவானது. இது குறித்து உபாசி தேயிலை ஆராய்ச்சி மண்டல மைய அதிகாரி ஒருவர் கூறியதா வது:– கடந்த 2012–ம் ஆண்டை விட 2013–ம் ஆண்டு பருவ மழை குறைவாகவே பெய்து உள்ளது. கடந்த 2012–ம் ஆண்டில் 147 செ.மீ. மழை பெய்தது. 2013–ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை 137 செ.மீ. மட்டுமே மழை பெய்து உள்ளது. இதனை வைத்து பார்க்கும் போது 2012–ம் ஆண்டைவிட 2013–ம் ஆண்டில் 10 செ.மீ. மழை குன்னூர் பகுதியில் குறைவாக பெய்து உள்ளது.

<u>தேயிலை மகசூல் அதிகரிப்பு</u>

பச்சை தேயிலை மகசூலை பொறுத்தவரை 2013–ம் ஆண்டில் அதிக மகசூல் கிடைத்து உள்ளது. இதற்கு காரணம் தேயிலைக்கு ஏற்ற சூழல் கிடைத்ததால் மகசூல் அதிகரித்து உள்ளது. 2012 ஜனவரி முதல் டிசம்பர் வரை 13.01 மில்லியன் கிலோ கிராம் பச்சை தேயிலை அறுவடை செய்யப்பட்டு உள்ளது. 2013–ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை 14.06 மில்லியன் கிலோ கிராம் பச்சை தேயிலை அறுவடை செய்யப்பட்டு உள்ளது.

**நிலக்கோட்டை பகுதிகளில் பொங்கலுக்கு தயாராகும் மஞ்சள் கிழங்கு**



நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகா செங்கட்டாம்பட்டி, சாலைபுதூர் உள்ளிட்ட கிராமங்களில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு மஞ்சள் கிழங்கு செடி சாகுபடி செய்யப்பட்டது. பருவமழை பொய்த்து

போன நிலையிலும், இருந்த கிணற்று நீர், ஆழ்குழாய் தண்ணீரை வைத்து விவசாயிகள் பயிரை விளைச்சல் அடைய செய்துள்ளனர். பொங்கலை முன்னிட்டு பயிர் செய்யப்பட்ட இந்த மஞ்சள் கிழங்கு பயிர்கள் தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளது. இதையடுத்து மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்குமா என்று விவசாயிகள் எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்.

**காப்பி விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**




இடுக்கி,

இடுக்கி மாவட்டத்தில் காப்பி விவசாயம் அதிகமாக நடந்து வருகிறது. விலை வீழ்ச்சி,தொழிலாளர் பற்றாக்குறை ஆகியவற்றால் காப்பி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.கடந்த 2 வருடங்களைவிட இந்த வருடம் உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. கிலோ ரூ.150–க்கு விற்ற காப்பி கொட்டை, இப்போது ரூ.60–க்கு விற்கிறது. காப்பி தோட்டத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்கு தினக்கூலியாக ரூ.400 கொடுக்கப்படுகிறது. இடுக்கி மாவட்டத்தில் உடும்பன்சோலை, பீர்மேடு, தேவிகுளம் தாலுகாவில் 8 ஆயிரம் காப்பி விவசாயிகள் இருக்கிறார்கள். இவர்கள் விலை வீழ்ச்சி, உற்பத்தி குறைவு மற்றும் தொழிலாளர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இடுக்கி மாவட்டத்தில் அரபி,ரோபர்ஸ்ட் ஆகிய 2 வகை காப்பிகள் பயிரிடப்படுகிறது. இதில் அரபி காப்பி,ரோபர்ஸ்ட் காப்பியை விட ரூ.30, ரூ.40 அதிகமாக உள்ளது. எனவே காப்பி விலை வீழ்ச்சியை தடுக்கவும், காப்பி விவசாயத்தை பாதுகாக்கவும் அரசும், காப்பி போர்டும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காப்பி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை: ஜனவரி 20-ல் பேச்சுவார்த்தை நடக்குமா?- பேச்சுக்கு முன் மீனவர்களை விடுவிக்க முயற்சி

இந்தியா மற்றும் இலங்கை மீனவர்களுடனான பேச்சு வார்த்தை ஜனவரி 20-ல் நடத்த தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கு முன்பாக இருநாட்டு சிறைகளிலும் இருக கும் மீனவர்களை விடுவிக்கும் முயற்சியும் நடந்து வருகிறது.

இதை ‘தி இந்து’விடம் உறுதி செய்த மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன், “பேச்சு வார்த்தைக்கு முன்பாக நல்லெண் ணம் கருதி தமிழகம் மற்றும் ஆந்திர சிறைகளில் இருக்கும் இலங்கை மீனவர்களை விடுவிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேபோல், இலங்கை யின் சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களையும் அதன் அரசு விடுவிக்கும் என நம் மத்திய அரசு ஆவலுடன் எதிர்பார்க்கிறது” என்றார்.

இந்த விடுதலையை, தமிழர் கள் திருநாளான பொங்கல் தினத்திற்குள் செய்யவும் தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறிய சுதர்சன நாச்சியப்பன், ‘இந்த கூட்டத்தை நடத்த இருப்பது தமிழக அரசுதான். இதில், இலங்கை யிலிருந்து வருபவர்களுக்கு விசா அளிப்பது போன்ற உதவிகளை மட்டுமே மத்திய அரசு செய்து வருகிறது. இந்தக் கூட்டத்திற்கு, தமிழக அரசு அளித்த ஒத்துழைப் பின் அடிப்படையில்தான், மத்திய அரசு முழு முயற்சியும் செய்து வருகிறது.’ எனக் கூறினார். இந்த கூட்டம் குறித்து வெளி யுறத்துறை அதிகாரிகள் கூறிய தாவது:

இந்த கூட்டத்தில் தமிழக நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் உள்ளிட்ட 4 அமைச்சர்கள், நான்கு உயர் அதிகாரிகள் கலந்து கொள்வார்கள் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மீனவர்கள் சார்பில் ராமேஸ் வரம், புதுக்கோட்டை, நாகபட்டி னம், தஞ்சாவூர், காரைக்கால் மற்றும் திருவாரூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த மீனவ பிரதி நிதிகள் 6 பேர் பங்கேற்பர். இதற் கான தகவல் சம்பந்தப்பட்ட மீனவர் களுக்கு இன்னும் அனுப்பப்பட வில்லை என்றனர்.

**பதிலளிக்காத இலங்கை**

ஜனவரி 20-ல் கூட்டம் உறுதியாக நடக்குமா எனத் தெரியவில்லை. இலங்கை அரசு கூட்டம் தொடர் பாக எவ்வித பதிலும் இதுவரை தெரிவிக்கவில்லை.

இதுகுறித்து மத்திய வெளியுறத்துறை துணை செயலாளர் மயாங் ஜோஷி கூறுகையில், “இந்த கூட்டத்திற் கான ஏற்பாடுகள் அனைத்தும் தயா ராகி விட்டதாக தமிழக அரசு தெரி வித்துள்ளது. இதை இலங்கை அரசுக்கு தெரி வித்து உள்ளோம். அவர்களிடம் இருந்து இன்னும் பதில் வர வில்லை. அது விரைவில் வரும் என எதிர்பார்க்கிறோம். இது பற்றி நீங்கள் இலங்கையில் தூதரகத்தில்தான் கேட்க வேண்டும்” என்றார். சமீபத்தில் நடந்த காமன்வெல்த் மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளாமல் புறக் கணித்ததால், இலங்கை அதிபர் ராஜபக்சே இந்தியா மீது கடும் கோபத்தில் உள்ளார்.

அதை, தணிக்கும் வகை யிலும், இருநாட்டு மீனவர்களுக் கான பேச்சுவார்த்தைக்கு அந்நாட்டு அரசை தூண் டும் வகையிலும்தான் இந்திய சிறைகளில் இருக்கும் இலங்கை மீனவர்களை விடுவிக்கும் நட வடிக்கைகள் தொடங்கியுள்ள தாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் உள்ள சிறை களில் தமிழகம் மற்றும் புதுச் சேரி மீனவர்கள் 313 பேர் உள்ளனர். அதேபோல், தமிழகம், ஆந்திரா மற்றும் ஒரிசா சிறைகளில் சுமார் 200 இலங்கை மீனவர்கள் இருப்ப தாகக் கூறப்படுகிறது.